# ரயிலில் ஒரு பயணி

-லாவண்யா

என் பேரு குமாரு. மனுசனுக்கு பேரு ஒரு அடையாளம். முகத்தை பெரிசா மாத்த முடியாது. முழியை மாத்தமுடியாது. கட்டைவிரல் ரேகையை மாத்தமுடியாது. பேரை மாத்திக்கலாம். மாத்திகிட்டேன். எனக்கு ஒவ்வொரு ஊர்லே ஒரு பேரு. என்னுடைய அப்பா அம்மா வெச்ச பேரு எனக்கு மறந்துபோயிடுச்சு.. ரயில்லே போய்கிட்டிருக்கேன். ரயில்லே ரொம்ப தொலவு போறது எனக்கு ரொம்பவும் பிடிக்கும். ரயில் ஒரு உலகம் போலத்தான். விதம்விதமான மனுசங்க. விதம்விதமான மூஞ்சிங்க விதம்விதமான. காரணத்துக்காக பிரயாணம். விதம்விதமான ரயில்சிநேகம். விதம்விதமானபொளப்பு.. எல்லாரும் ரயில்லே வர்ராங்க. பகல் நேரத்துலே ரயில்லே போனா கூடவர்ரவங்க கிட்டே பேசிக்கிட்டே போவேன். நெறய பேருகிட்டே பேசும்போது நெறய விஷயம் தெரியுது. ஒவ்வொருத்தரும் எவ்வளவு சுமையைத் தலையிலே வெச்சுகிட்டு வாழறாங்கன்னு குறிப்பாத் தெரியுது. அரசியல் நுணுக்கமெல்லாம் கூடத் தெரியவருது. பகுத்தறிவுக்கு புரியாத பல சம்பவங்கள் அனுபவ உண்மைகளா பலர் சொல்றாங்க.

ஒரு சின்னப்பையன் சட்டைத் துணியாலே குப்பையைப் பெருக்கிட்டு கையேந்தறான். என்னைப்போல வீட்டைவிட்டு ஓடிவந்துருப்பான்போல. ஒருத்தன் வேர்க்டலை விக்குறான். ஒரு வயசான பாட்டி பூ விக்குது.. கண்ணு தெரியாதஒருத்தரு பாவம் கீ செயினு, பேனா விக்கறாரு. இத வித்து லாபம் பாத்து இவங்க சோறு திங்கணும்னு நெனக்கும்போது சங்கடமாயிருக்கும். இவங்கல்லாம் பத்தாதுன்னுஅரவானிங்க வளையல் குலுங்க கைதட்டி காசு கேக்கறாங்க. இவங்களைப் பாக்கும்போதெல்லாம் எனக்கு நீலம் அரவானி ஞாபகத்துக்கு வரும். நீலம் அரவானி தில்லியில் ஒரு முக்யமான புள்ளி. அரசியல் அதிகாரிகள் செல்வாக்கு உண்டு. ஆதரவுஉண்டு. சினிமாக்காரங்க சிநேகம் உண்டு. தில்லியிலே நெறய காரியம் நீலத்தை வெச்சு சாதிச்சவங்க உண்டு. சாவும்போது ஒண்ணரை கோடி ரூவா சொத்திருந்ததாம் இவங்க ரயில்லே. பிச்சைஎடுக்கறாங்க. கைகால் நல்லா இருக்கறவனுக்கு பிச்சைபோடமாட்டேன். குருடன்.மொடவன், தொழுநோயாளி, அரவானிகளுக்கு கைல வர்ரதைக் கொடுப்பேன். ஒவ்வொருத்தருக்கு



ஓவியம்: ஜேகே

ஒரு வேஷம் கட்டுது வாழ்க்கை. நமக்குத் தெரியாத ஒரு சக்தி நம்மையெல்லாம் ஆட்டிப்படைக்குது. அதைத்தான் அதிர்ஷ்டம், விதி, தலையெழுத்துன்னு சொல்றாங்கபோல. இல்லாங்காட்டி பெரிய பணக்காரனுக்கு குணமாகாத வியாதி வருவானேன்? டாக்டர் புள்ளை ஊமையாப் பொறப்பானேன்? மூளை டாக்டருக்கு மூளை வளராத புள்ளை பொறப்பானேன்?

தில்லிக்குப் போயிக்கிட்டிருக்கேன். பகல் ட்ரெயின்லே போக முடியல்லே. ராத்திரி ரயில். கொஞ்ச நேரம் நியூஸ்பேப்பர், வாரப் பத்திரிகையெல்லாம் பாக்கறதுல டைம் போச்சு. மணி ஒம்பது. சாப்பாட்டு டைம். புள்ளைகுட்டியோடு வர்ரவங்க பேப்பர் ப்ளேட் வெச்சிகிட்டு கொண்டு வந்ததை சாப்பிடறாங்க. கொளந்தைங்க பிஸ்கட், சிப்ஸ்னு அரைக்குது. நானும் ரெண்டு பொட்டலம் வாங்கி சாப்டேன். மெதுவா கம்பார்ட்மெண்ட்லே சத்தம் குறையுது. எல்லாரும் சாயறாங்க. எனக்குத் தூக்கம் வல்லே. இன்னும் கொஞ்ச நேரத்துலே ஒவ்வொருத்தனும் கொறட்டைவிட ஆரம்பிச்சுருவான். அதுவே ஒரு ரயில் போற மாதிரி இருக்கும். மரத்தை ரம்பத்தால அறுக்கறமாதிரி சத்தம் வரும். ஒவ்வொருத்தனும் கொறட்டை சத்தத்தை ஏத்திகிட்டேபோயி எறக்குவான். எறங்கும்போது தாடையிலே எச்சில் ஒளுகும்.. சிலபேர் முளிச்சிக்குவான். சிலபேர் பொணத்தூக்கம் தூங்குவான். ரயிலு குலுங்கறதுலே எனக்கு தூக்கம் வராது. அப்படியே தூங்கினாலும் கோழித்தூக்கம்தான்.. எனுது கீழ் பெர்த். இன்னிக்கு நல்ல நேரம். பொம்பளைங்க யாரும் பெர்த்தை மாத்திக்கச் சொல்லி கேட்டுக்கலே. அதனாலே சின்னப்புள்ளையாட்டாம் ஜன்னல் ஓரமா ஒக்காந்துகிட்டு இருட்டுலே பாக்கறேன். ரயில் போடற தடக் தடக் சத்தம் உளியும் சுத்தியும் வெச்சுகிட்டு அப்பாரு மரத்தைச் செதுக்கற சத்தம்போலக் கேக்குது...

என்னையும் என் தம்பியையும் நல்லாபடிக்கவெக்கணும்னு எங்க ஐயாவுக்கு ரொம்ப ஆசை. எனக்கு கொடுப்பினை இல்லே. படிப்பு ஏறலே. பள்ளிக்கூடத்து கொட்டாயைப் பாக்கவே எனக்குபிடிக்கலே. ஐயனார் கோவில் திண்ணையிலே தூங்கி, கோலி கிட்டிப்புள்ளு விளையாடி பீடி பிடிச்சு ஏழாங்கிளாஸோட நின்னுட்டேன். அதுக்கப்பறம் எங்க ஐயா எங்கிட்டே ஒருவாட்டி கூட மொகங்கொடுத்துப் பேசல்லே. தொழில் கத்துக்கன்னாரு. தனக்கு உதவியா தச்சுவேலைக்கு கூட்டிகிட்டு போனாரு

அப்போ எனக்கு பதினாறு வயசிருக்கும்.

ஒரு வீட்டுக்கு வாசக்கால் அறுக்கச் சொன்னாரு எங்க ஐயா எங் கெட்ட நேரம் அது கோணலாய் போச்சு. 'வ்வுத்துக்கு சோறு திங்கறியா பீ திங்கறியான்னு கேட்டாரு.

அவரு அப்படி கேட்டதுமே கொமட்டிகிட்டு வந்துச்சு. கோவம் தலைக்கேறி கையிலிருந்த உளியை என்மேலே விட்டெறிஞ்சாரு. என் நெத்தியிலேருந்து ரத்தம் கொட்டிச்சு. அது என்னை என்னவோ பண்ணிடுச்சு. 'நீ போடற சோத்தை இனி திங்கமாட்டேன்னு ரயிலேறிட்டேன். அட்டை, காலி பாட்டில், ப்ளாஸ்டிக் பை, பளய இரும்பு பொறுக்கற வேலைதான் நான் பாத்த மொத வேலை ஒரு நாளக்கு பத்து ரூவாசம்பாத்தியம். ஷூ பாலீஷ் போடறது, கார் துடைக்கறது, கிரானாலே பொட்டலம் மடிக்கிறதுன்னு நான் செய்யாத வேலையே இல்லே. சின்ன டௌனு, பெரிய டௌனு, பெரிய சிட்டிங்க எல்லா ஊர்லேயும். நாடோடியா திரிஞ்சேன். நாலு காசுக்கு நாயா அலஞ்சேன். ஒருவேளை நான் படிச்சிருந்தா இவ்வளவு கஷ்டப்பட்டிருக்கமாட்டேனோன்னு தோணிச்சு. இக்கரைக்கு அக்கரை பச்சை சமாச்சாரம்தான். படிச்சவன் என்னத்தைக் கிளிச்சுப்புட்டான்?. ஒரு வெளக்குமாறு ஆபிசரு ஒரு குமாஸ்தா, ஒரு தாசில்தாரு, ஒரு எஸ்.ஐ இப்படி ஏதாவது ஒண்ணா ஆயிருப்பேன். இவனுங்களப்போலவே நானும் கை புளுத்துப் போறமாதிரி லஞ்சம் வாங்கியிருப்பேன்

எனக்குத் தெரிஞ்ச தச்சு வேலைய என்னை நம்பி யாரும் கொடுக்கலே. அதனாலே ப்ளம்பர், எலட்ரீசியன் கார் மெக்கானிக்கிட்டேயெல்லாம் எடுபிடியா வேலை பாத்தேன். இவங்களுக்கு எங்கப்பனே தேவலாம். ஒருத்தன் பட்மாஷ்னு திட்டுவான் ஒருத்தன் நான் பொறந்த எடத்துலே நான் நுழைஞ்சதா திட்டுவான்.. ஒருத்தன் என் குண்டிக்குள்ளே விரலைவிட்டு ஆட்டுவதா திட்டுவான். அடியும் வாங்கியிருக்கேன். ஒரு ப்ளம்பரை இரும்பு கொளாயாலேயே திருப்பி

அடிச்சேன். எல்லாமே அன்னாட ஜீவனத்துக்குத் தான்உதவிச்சு. சொவுத்து இடுக்குலே கரப்பான் பூச்சி குடியிருக்கறமாதிரி வாழற வாழ்க்கை ஒரு வாழ்க்கையான்னு கொலபா பீச்சுலே ஒக்காந்து எத்தனைவாட்டி யோசிச்சிருப்பேன்னு எனக்கே தெரியாது. நடைபாதைலே பொறந்து நடைபாதையிலே வாழ்ந்து நடைபாதையிலேயே சாகற அப்பாவி ஜனங்களைப் போல நானும் முடிஞ்சுறக் கூடாதுங்கறதுங்குற பயம். என்னை அரிச்சு தின்னுருச்சு மும்பையிலே, தில்லியிலே, சென்னையிலே, ஜெய்பூரிலே பல கோடீசுவரங்களைப் பாத்திருக்கேன். பலபேரு ரொம்ப படிச்சவங்க இல்லே. படிப்புக்கும் பணத்துக்கும் தொடர்பில்லே. திறமையான வக்கீலுங்க வாய்தா வக்கீலா இருக்கறதையும் பாத்திருக்கேன. திறமைக்கும் துட்டு பண்றதுக்கும் தொடர்பில்லே. டாக்டருக்கு திறமை மட்டும் பத்தலே. கைராசி டாக்டர்னு பேரு வரணும். அப்பத்தான் துட்டு.

நான் புரிஞ்சுகிட்டது என்னன்னா பணம் பண்றதுஒருதனிகலை.திரும்பத்திரும்பஒவ்வொரு கோடீசுவரன் ஜாதகத்தையும் அலசினப்ப உண்மை விளங்கிடிச்சு. இவனுங்க ஔப்பால் உயர்ந்த உத்தமருங்கன்றது கப்சா. கோல்மால் பண்ணாம அளவுக்கதிகமான பணத்தை எந்த நாயும் சம்பாதிக்கலே. குற்ற வாழ்க்கையை ஆரம்பிச்சேன். வீடு காலி பண்ணாமாட்டேன்ற குடித்தனக்காரனை மெரட்டிக்கிளப்பறது, கடைக்காரங்க சண்டைக்குபஞ்சாயத்து பண்ற துன்னு ஆரம்பிச்சேன். பெரிய எடத்துப் பொண்ணுங்களை வலைபோட்டுப் பிடிக்கிற பையன்களுக்கு சாத்துபடி செய்யறது, இப்படி விதம்விதமா கைநிறைய காசு கெடச்சது. ருசிருசியான சாப்பாடு போட்டது. தின்னது ஜீரணமாக போலீசுலே அடி வாங்கிக் கொடுத்தது.இப்ப நெனச்சாலும் சிரிப்பு வருது. ஒரு சமயம் ஒரு அடிதடி கேசுலே மாட்னேன். தாணாவுக்கு கூப்பிட்டுகிட்டுப் போயி அடிச்சாங்க. ‘காலைலே தூக்கம் முளிச்சா ஒரு கொளந்தை பொறந்த சேதி கேக்கறதில்லே. ஒரு கல்யாணங் கார்த்திக்கு போகமுடியறதில்லே. நிம்மதியா சாமி கும்புட விடறீங்களாடா? பத்துநிமிஷம் பாட்டு கேக்க வுடறீங்களாடா? எந்நேரமும். அடிதடி, குத்து கொலை, கற்பழிப்புங்கறதைதவிர எங்க பொளப்புலே சந்தோஷமா எதுனாச்சும் இருக்குதாடான்னு சொல்லி சொல்லி அடிச்சாங்க. மெத்தை தெக்க பஞ்சடிக்கறமாதிரி அடிச்சாங்க அதெல்லாம் ஒரு காலம். இப்பல்லாம் எளுந்து நின்னு சலாமடிப்பாங்க.

எல்லாம் காசுதான். கொள்ளையடிக்கறவன் கிட்டே காசு இருக்கு. கத்தியெடுத்தவன்கிட்டே அதிகாரம் இருக்கு. அன்னிக்கும அதான் கதை. இன்னிக்கும் அதான் கதை. வீட்டைவிட்டு வந்த இருபது வருஷத்துலேநான் கத்துகிட்ட பாடம் இதுதான். இன்னிக்கு குபேரங்க யாரு? தொழிலதிபர்கள். இன்னிக்கு ராஜாங்க யாரு? அரசியல்வாதிகள். அதனாலே காசிருக்கறவனை அண்டிப் பொளக்கிறேன். அதிகாரத்துலே இருக்கறவனுக்கு அடிமையா வாழறேன். இவனுங்க மேலே எனக்கு எந்த மரியாதையும் கெடையாது.

இவனுங்க என்னைவிட மோசமான பொறுக்கிங்க. ஒரு பெரிய தொழிலதிபர். ஒரு வருமானவரி அதிகாரி வீட்டைச் சூறையாடச் சொல்லி எனக்கே காசு கொடுத்தான். நானும் செஞ்சேன். இன்னொரு தொழிலதிபர் தனக்குப் போட்டியாயிருந்த தொழிலதிபர் குடோனைக் கொளுத்தச் சொன்னான். ஆளு ஏற்பாடு பண்ணி செஞ்சேன். எனக்கு காசு வேணும். அவனுங்ககிட்டேதான் காசு இருக்குது. அதனாலே அவனுங்களுக்கு சேவகம் பண்றேன்.

கட்சிக்காரனுங்களும் என்னைத் தேடி வந்தவன் உண்டு.. இந்தக்காலத்து குபேரனுங்க தொழிலதிபர்கள். இந்தக்காலத்து ராஜாக்கள் அரசியல்வாதிகள். இவங்களை நம்பித்தான் நான் பொளச்சாவணும்.

இது ஒரு பேமானிப் பொளப்புன்னு எனக்கு நல்லாவே புரியுது. ஆனாலும் நான் வெக்கப்படலே. ஏன் வெக்கப்படணும்? ஆட்டை வெட்றமாதிரி ஆளை வெட்டினவந்தான் ராஜாஆனான். மரத்தைவெட்றமாதிரி மனுசனை வெட்னவன்தான் தளபதியானான்.அதுக்கு ஒரு நியாயத்தைக் கண்டுபிடிச்சு சொன்னவன்தானே மந்திரியானான்?

இதெல்லாம் சிந்தன் மித்ராவுக்கு மண்டையிலே ஏறலே. நேர்மை நியாயம்னு பெனாத்திக்கிட்டிருக்கான். முட்டாள்

*2*

சிந்தன் மித்ரா நல்லவன். பொளக்கத் தெரியாதவன்தான் . தோசையைப் போல ஒலகத்தைத் திருப்பி போடணுங்கறான். நடக்கறகாரியமா? ஏசுநாதராலே முடியலே.. புத்தராலே முடியலே. ஏசுநாதருக்கு சிலுவை தீர்ப்பாச்சு. புத்தர் கடைசிக்காலத்துலே பாடலீபுரத்துலே அடையாளம் தெரியாத பிச்சைக்காரனா வாழ்ந்து முடிஞ்சதா, இதே மாதிரி ரயில்ல போறப்போ படிச்சவங்க ரெண்டு பேர் பேசிக்கிட்டு வந்தாங்க.

சிந்தன் மித்ரா வங்காளி. முண்டைக்கண்ணன். முப்பதுவயசுதானிருக்கும். மெட்ரிகுலேஷன் படிச்சிருக்கான். டர்னர், பிட்டர் படிப்பு படிச்சிருக்கான்.அலுமினியத் தொழிற்சாலைக்கு சம்பளத்துக்கு வேலைக்கு வந்தான். பொளப்பைப் பாக்கவேண்டியதுதானே? வேலை பிடிக்கலியா? வேற வேலை பாத்துகிட்டு போகவேண்டியதுதானே? ஊர் நாயம் இவனுக் கெதுக்கு?

கண்டதையும் படிச்சிருக்கான். ஏட்டுச் சொரக்காய். சொந்த புத்தி இல்லே.

சிவானியோட தொழிற்சாலையிலே சங்கம் ஆரம்பிச்சிட்டான். கறாரா எட்டு மணி நேர வேலைதான் செய்வோங்கறான். அதுக்கு மேலே வேலை செஞ்சா டபுள் சம்பளம் தரணும்கறான்.. சம்பளத்தைக் கூட்டிக்கொடுங்கறான். போனஸ் கொடுங்கறான். வேலை நிறுத்தம் செய்யறான். மூணுமாசமா தொழிற்சாலையை மூடியேபுட்டான். பேப்பர்காரன் செய்தியா போட்டுட்டான்.

சிவானிஜியை மத்த கம்பெனிக்காரங்க துக்கம் விசாரிச்சாங்க. உள்ளுக்குள்ளே சந்தோசப்பட்டவங்களும் உண்டு. அவருகிட்டே பேசி நாடி பிடிச்சு பாத்துட்டு சிந்தன் மித்ராவுக்கு கொம்பு சீவி விட்டவங்களுமுண்டு. எளக்காரமா நடந்துகிட்ட அதிகாரிகளுமுண்டு. ‘கூலிக்கார நாயிங்க கொலைக்குதா? ரெண்டு எலும்புத் துண்டை போட்டுறணும். வாயை மூடிக்கும். பத்து கோரிக்கை வெக்கறான்னா ரெண்டை ஒத்துகிடுங்க. ரெண்டை பரிசீலனை பண்றோம்னு தள்ளிப்போடுங்க. ரெண்டுக்கு சால்ஜாப்பு சொல்லுங்க. நாலை முடியாதுன்னுங்க’ சிவானிக்கு இதெல்லாம் தெரியாத மாதிரி மதன்லால் கிஷோர் அட்வைஸ் கொடுத்தாரு. ஆனா தொழிலாளர் ஒற்றுமை ஓங்கிச்சே தவிர வளையலே. குறையலே. சிந்தன் மித்ரா அந்த அளவுக்கு அவங்களை உசுப்பேத்தி வெச்சிருந்தான்.

சிவானிஜி அரசியல் ரூட்லே போனாரு. தில்லியிலே அவருக்கு எவ்வளவு செல்வாக்கு இருக்குன்னு எனக்குத் தெரியும். போன்லேயே இந்தியாவுலே எந்த மாநிலத்துலேயும் காரியம் சாதிக்கற செல்வாக்குள்ளவருதான். மூணு வருசத்துக்கு முன்னாடி இதே ரயில்லே நானும் சிவானிஜியும் ஒண்ணாப் போனோம். ஒரு பெரியஅரசியல் புள்ளி பத்துகோடி ரூவா பணம் ரெண்டு நாள்ளெ கொண்டுவந்து கொடுக்கச் சொல்லி பேசியிருக்காரு. பணத்தோட பொறப் பட்டாரு. பாதுகாப்புக்காக என்னையும் கூட்டிகிட்டு போனாரு. அவரை எனக்கு ரொம்ப வருசமாத் தெரியும்.

இன்னிக்கு நான் திங்கற சோறு, வாழற வசதி எல்லாம் அவரால வந்தது. அவருடைய அலுமினியம் பேக்டரிக்கு எலட்ரிகல், ப்ளம்பிங், பெயிண்டிங் எல்லாம் எனக்கு காண்ட்ராக்டா கொடுத்து என்னை ஒரு மனுசனாக்கினாரு. தில்லிலே இருந்த அந்தரெண்டு நாளும் அவரு என்னை ராஜா போல நடத்தினாரு. அவரு எங்கேதங்கினாரோ அங்கேயே தான் தங்கினேன். அவரு என்ன சாப்பிட்டாரோ அதுதான் எனக்கும். அவர் குடிச்ச அதே விஸ்கிதான் எனக்கும். அவரு என்னை ஒரு மனுசனா நடத்தினாருங்கறதுனாலே அவருமேலே எனக்கு ஒரு விசுவாசம் உண்டு. அவர் காசுமட்டும் குடுக்கலே. கௌரவம் கொடுத்தாரு. ஒருத்தர் முகத்தை ஒருத்தர் பார்த்துகிட்ட நேரம்னுதான் சொல்லணும்.

ஆனாலும் அவர் கெட்ட நேரம் ‘இது தேர்தல் சீசன்.. எதிர்கட்சிக்காரன் பத்திரிகைக்காரன் ரெண்டுபேரும் ஊதிப் பெரிசாக்கிடுவாங்க. தேர்தல் முடியட்டும்பாக்கலாம்னு களண்டு

கிட்டாங்க சிவானி சாப் நொந்துபோயிட்டாரு. அவருக்கு வீட்லேயும் பெரிய சந்தோசம் கிடையாது. ஒரு பையன். கல்யாணமானதும் தனியா போயிட்டான். ஒரு பொண்ணு. லட்சணமா இருக்கும். அதைவெச்சு குடித்தனம் பண்ண மாப்பிள்ளை பையனுக்கு கொடுப்பினை இல்லே. டைவர்ஸ் பண்ணிட்டான். சிவானிஜிக்கு வெளியிலிருந்த மதிப்பையும் சிந்தன் மித்ரா கெடுத்துட்டான். யாருக்கோ போன் போட்டாரு. உடனே வரச்சொன்னாரு. அப்பத்தான் எனக்கே தெரிஞ்சது. அந்த பேக்டரி சிவானிஜிக்கு முளுக்க சொந்தமில்லேங்கற விசயம். பெரியமுதலாளி வில்சன். ஒரு வாரம் களிச்சு அவர் வந்தாரு. அடேங்கப்பா! அவர் மிடுக்கென்ன? வந்த லம்போர்கினி காரென்ன?

எட்டரை கோடியாம். அவர் ட்ரஸ் என்ன? வந்த ட்ரைவர் கிட்டே பேச்சு கொடுத்தப்ப தெரிஞ்சது. அவரு காலையிலே இந்தியாவுலே டிபன் சாப்டுவாராம். மதியம் லண்டன்லே சாப்பாடாம். ராத்திரி சாப்பாடு அமெரிக்காவுலேயாம். வில்சன்கிட்டே விலா வரியாப் பேசினாரு சிவானிஜி. கோவத்துலே மொகமேல்லாம் செவந்துபோச்சு... ஆனா வில்சன் சிரிச்சுகிட்டே எல்லாத்தையும் கேட்டதாச் சொன்னாரு சிவானியோட பி.ஏ. திரிபாதி. உணர்ச்சிவசப்படவேயில்லையாம். மூணுமாசம் பேக்டரியை மூடினதுலே எவ்வளவு நட்டம்னு கேட்டாராம். சங்கத்தலைவர் பேரைக்கேட்டாராம். எந்த ஊருன்னு கேட்டுகிட்டாராம்.

சிவானிஜி, டாலர் கணக்குலே இது ஒண்ணுமில்லே. பாத்துக்கலாம். உலகம் முழுக்க இந்தப் பிரச்சினை இருக்கத்தான் செய்யுது அவங்க உழைப்பினால மட்டும் லாபம்வரல்லே. நம்ம நிர்வாகம், வியாபார தந்திரம் இல்லேன்னா லாபம் எப்படி வரும்? இதெல்லாம் அவங்களுக்கப் புரியறதில்லே. ரெண்டு வருசம் சம்பாதிச்ச லாபம்மூணுமாசம் பேக்டரியை மூடினதுலே போயிருச்சு. நாம எப்படி அவங்களுக்கு சம்பளத்தைக் கூட்டிக் கொடுக்கமுடியும்? நெலம் வாங்க முதல் போட்டது நீங்க. மெஷின் வாங்க, இறக்குமதி செய்ய லோன்போட்டது நானு. நம்ம போட்ட காசை நாம எடுக்காம ஒர்க்கர்சுக்கு கொடுக்கறதுக்கு நாம தொழிலே செய்ய வேண்டாமே? லாபத்துலே பங்கு போனசாக் கேக்கறாங்க இல்லே? நட்டம் வந்தா சம்பளமில்லாம வேலை செய்வாங்களா?. அவங்க வேலைக்கு வரணும்னாதானே நாம கோரிக்கைக்கு ஒத்துக்கணும். அவங்க வேலைக்கு வரவேணாம்". சிவானி கேட்டிருக்கிறார். 'மிஸ்டர் வில்சன், அப்ப நாம எப்படிதொழில் பண்றது?' 'சிவானிஜி, நமக்கு ஆயிரம் வழி இருக்குது. அவுட்சோர்சிங் பண்ணலாம்'.

இவங்களையெல்லாம் வேலைநீக்கம் செஞ் சதா லெட்டர் அனுப்பிச்சரலாம். ஒப்பந்த அடிப்படையில் வேற ஆளுங்களை வேலைக்குச் சேத்துக்கலாம். நம்ம ப்ரொடக்ஷனை மூணா பிரிச்சு வேற வேற ஊருக்கு மாத்திடலாம். நமக்கு விசுவாசமான ஆளுங்களை வேலைக்கு சேத்து அவங்களை வெச்சு நம்ம சொல்றதை கேக்கறமாதிரி ஒரு தொழிற்சங்கத்தை பதிவு செய்யலாம். நாமளே கோரிக்கைப் பட்டியல் தயார் பண்ணி கொடுத்து அதை நிறைவேத்தலாம். 'ஒரு வாரத்துலே என்னுடைய சட்ட ஆலோசகர்கிட்டேருந்து உங்களுக்குப் போன் வரும். அவர் என்ன சொல்றாரோ அதை அப்படியே செய்யுங்க' ன்னு சொல்லிட்டுப் போயிட்டார் வில்சன். இதெல்லாம் எனக்குச் சொன்னவர் சிவானியோட பி.ஏ. திரிபாதி. மனுசன் வாயத் தெறந்தான்னா ஜோக் சொல்லிகிட்டேயிருப்பாரு.

அவருக்கு ஒரு வீக்னெஸ். தூணுக்கு சேலை கட்டியிருந்தாலும் தூக்கிப் பாப்பாரு. தொழிலதிபருங்க அதிகாரிகளுக்கு டின்னர், பரிசு, கொடுத்து சரிக்கட்றது போல திரிபாதிக்கு ஓட்டல்லே டின்னர் கொடுத்து ஆளைச் சரிக்கட்டிட்டேன். எல்லா எடத்துலேயும் தகவல் தர்ரதுக்கு ஒரு ஆளை வெச்சிக்கணும். யார் எப்படித் திரும்புவான்னு தெரியாது. சிவானிஜியானாலும்கூட. பணம் பத்தும் செய்யும்.

வில்சன் சொன்னபடி போன் வந்தது. 'சொல்லியாச்சு. ஓகே. ப்ரொசீட்'. மூணே வார்த்தைகள்தான்.

வாய்க்கரிசி போட்டாச்சு. சம்மந்தப்பட்ட துறை கண்டுக்காது. காரியத்தை உடனே

முடின்னு இதுக்கு அர்த்தம்.

*3*

ரயில் ஒரு ஜங்ஷன்லே நிக்குது. எந் நேரத்துக்கும் கௌம்பலே. ப்ளாட்பாரத்துலே எறங்கி விசாரிச்சப்போ தெரிஞ்சது. ஒண்டியா ரயில்ல வந்த ஒரு நாப்பது வயசு ஆளு செல்போன்லே பேசிக்கிட்டே லேப்டாப்லே வேலை பாத்துகிட்டு வந்திருக்கான். திடீர்னு சுருண்டு விளுந்துட்டிருக்கான். அந்த சத்தத்துலே மத்தவங்க முளிச்சு பாத்திருக்காங்க.

மயக்கம்போட்டு விளுந்திருக்கான்னு தண்ணி கொடுத்திருக்காங்க. தண்ணி உள்ளே போவலே. ஜங்ஷன் வந்ததும் டிக்கெட் கலெக்டர் கார்டுக்கும் போலீசுக்கும் தகவல் கொடுத்திருக்காரு. அப்புறம் போலீசு, ஆளோட அடையாளம், அந்த ஆளோட பொட்டி படுக்கை, ஸ்டேட்மெண்ட் வாங்கறது எவ்வளவு வேலையிருக்குது?

எல்லாரும் எளுந்து ஒக்காந்துகிட்டாங்க. அப்பறம் ஒரே கேள்வி பதிலுதான். செத்தவன் யாரு? என்ன வயசு? எங்கே ஏறினான்? எந்த ஊருக்குப் போவணும்?

அடுத்த தலைமுறையிலே ரொம்ப்பபேர் செல்போன் பேசிக்கிட்டேதான் சாவாங்கன்னாரு ஒரு பெரியவரு. வெளியிலே வாங்கி சாப்டதிலே ஏதாவது கோளாறு இருக்குமனாரு ஒருத்தரு. பி.பி. ஏறிப்போயிருக்குமனாரு ஒருத்தரு. வயசு ஆளுங்களுக்கெல்லாம் சாவு வருது. ஒடம்பு பூரா வியாதி. எனக்கு சாவு வரமாட்டேங்குதுன்னு நொந்துகிட்டா ஒரு கௌவி. தண்ணி போட்டிருந்திருப்பாருன்னான் ஒரு புண்ணியவான். சாவுன்னா என்ன்னனு ஒரு சின்னப்பொண்ணு அவங்க அம்மாவைக் கேட்டது.

அது அப்படியே என் தலையிலே கோணி ஊசிமாதிரி எறங்கிச்சு.

சாவுன்னா என்ன சாவுன்னா என்னன்னு என் மூளைலே ஏகப்பட்ட குரல் கேட்டுச்சு. மொதவாட்டியா நான் சாவைப்பத்தி யோசிச்சேன். சாவுன்னா என்ன?

காணாம போறது. ஒடம்பு சக்கையாப் போறது.. ஒடம்பைவிட்டு உயிர் பிரியறதைக் கண்ணாலே பாக்க முடியலே. எந்த வழியா உயிர் வெளியிலே போகுதுன்னும் தெரியலே. பிறப்பும் இறப்பும் மனுசனுக்குத் தெரியாத ரகசியமாத்தான் இருக்கு. நமக்குத் தெரியாத ஒரு சக்தி ஒரு பவர் கடவுள் ஏதோ ஒண்ணு எல்லாத்தையும் நடத்துறதாத் தோணுது. எப்படி யோசிச்சாலும். மனசு அதே முடிவுக்குத்தான் வருது. என்னையறியாம நான் என் சாவைப்பத்தி யோசிக்கறேன். கத்தியெடுத்தவனுக்கு கத்தியாலெதான் சாவு. பாம்பாட்டிக்கு பாம்பாலெதான் சாவுன்னு சொல்றாங்களே உண்மைதானான்னு சிகரெட் பிடிச்சுகிட்டே ப்ளாட்பாரத்துலே நடந்துகிட்டே யோசிச்சேன்... எனக்குத் தெரிஞ்ச எத்தனையோ தாதாங்க கோஷ்டி சண்டையிலே செத்திருக்காங்க... நானும் ஒருநாள் செத்துத்தானே ஆவணும்? கத்தியோ? துப்பாக்கியோ? என்கௌண்டரோ?........

சாவு ஒரு நிமிஷம். அல்லது பாயிலே படுத்தா ஒரு மாசம். அல்லது ஒரு வருசம்.

இருந்தது முப்பத்தாறு வருசம். இந்த முப்பத்தாறு வருசமும் பளயசோறும் வெங்காயமும, கம்பஞ்சோறும் கத்தரிக்கா கொளம்பும் திங்கறதுக்கு இந்த ஒலகத்துலே எதுக்கு பொறக்கணும்? எதுக்கு வாழணும்? இந்த ஒலகத்துலே இருக்கற சொகங்களை அனுபவிக்காம ஏன் சாவணும்? எந்த சொகத்தையும் பாக்காம சாவறதுக்கு நான் என்ன முனிவரா? அரசன் அன்று கொல்லும் தெய்வம் நின்று கொல்லும்னு சொல்றாங்க. அதுப்படிப் பாத்தா எனக்குத் தெரிஞ்ச ரொம்ப பேரைக் கொன்னுருக்கணும். அரசனும் கொல்லலே. தெய்வமும் கொல்லலே.

ரயில் பொறப்படப்போவுதுன்னு அறிவிப்பு செஞ்சாங்க. ஒவ்வொருத்தரா பொட்டியிலே ஏறினோம். எல்லார் முகத்துலேயும் ஆழமான யோசனை தெரிஞ்சது. சைட்பெர்த் ஆளு பொத்தாம் பொதுவா சாவு மனுசனுக்கு எந்த ரூபத்துலே வரும்னு சொல்லமுடியாதுன்னு சொல்லிகிட்டே போத்திக்கிட்டாரு.

உண்மைதான். என் சாவு எந்த ரூபத்துலே வரும்னு எனக்குத் தெரியாது.

சாவு என் ரூபத்துலே வருதுன்னு சிந்தன் மித்ராவுக்கு தெரியாது.

ரயில் பொறப்பட்டுருச்சு. ■